முருகப்பெருமான் துணை

**மகான் பிடிநாகீசர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

19.05.2022, வியாழக்கிழமை

1. தருமனே கலிவெல்லப் பிறந்த
தவராசனே ஆறுமுக அரங்கனே
பெருமைபட உன்னால் இந்த உலகம்
புதுமை வளமை காணுமெனக் கூறி
2. கூறியே சுபகிருது விடை திங்கள்
குறைவிலா பஞ்ச திகதி குருவாரம்
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 05 ம் நாள், 19.05.2022 வியாழக்கிழமை)
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
தேசிகனுக்கு பிடிநாகீசர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர் வழிகள் கண்ட அரங்கன்
ஞானமே இந்த உலகை மீட்கும்
நம்பிவர ஞானப் படைகள் எனும்
4. எனும் சக்தி பெருகி இனிதே
எங்கும் மாற்றம் நடக்கும்
ஞானவான்களாக சகல துறையிலும்
நல்லோர்கள் நிரம்பி மாற்றம்
5. மாற்றம் உண்மை வழிகளாக
மக்களை பாதுகாக்கும் வழிகளாக
ஆற்றல்பட நிலைகள் கூடி
அகிலமே அமைதி ஆனந்தம் பெறும்
6. ஆனந்தமான சமூக மாற்றமும்
அனைவரும் சமமெனும் நிலையும்
ஞானதேசிகன் அருள் உபதேசத்தாலும்
நல்வழிகாட்டலாலும் காணும்
7. காணவே சன்மார்க்கம் எனும்
கந்தவேலன் வழிகாட்டலை
ஞானமாக மக்கள் ஏற்று
நடந்துவர பின் தொடர உலகில்
8. உலகினில் இடராகப் பற்றிய
ஊழல் எதிர்மறை எல்லாம்
கலகமாகி விலகி ஓடியே
காப்புமிக்க தரும வகை செயல்பாடுகளாக
9. ஆகவே மாற்றம் கண்டு
அனைத்து வகையிலும் தேற்றம்
மகான் அரங்கனால் நடக்கும்
மண்ணுலகில் இயற்கை வளமும்

10. வளமானத் தொழில் வளர்ச்சியும்
வதைசெய்யும் பேரிடரும் விலகி
சலனமற மக்களின் வாழ்வாதாரம்
சகல வகையும் பாதுகாப்புமிக்கதாகி

11. ஆகியே ஞானவான் தலைமையில்
அகிலம் ஞான ஆட்சிக்குவரும்
மகிழவே மக்களின் பாதுகாப்புக் கூடும்
மொழிந்திட்ட அருளாசி முற்றே

–சுபம்–